படுமழை – ஒலித்தலையுடைய மழை எனலுமாம். தார்மணி, இது சதங்கைத் தண்டை என்றும், குதிரையின் கழுத்திற் கட்டும் அணி விசேடம் என்றும் கூறுவர் நச். (கலி. 96, அடி. 15). தோடார் தார்மணி என்னும் பாடத்திற்குத் தொகுதி கொண்ட சதங்கைத் தண்டை என்க. அம்மா, வியப்பிடைச் சொல்லுமாம்.

பி - ம். 6. உபயணர்த்தன்ன. 9. காமர்பிணையோ 12. தயங்குபியம்ப. 14. பரிந்த கொள்கை.

## 155. பாலை

அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும்
பொருளி னாகும் புனையிழை யென்றுநம்
மிருளே ரைம்பா னீவி யோரே
நோய்நா முழக்குவ மாயினுந் தாந்தஞ்
செய்வினை முடிக்க தோழி பல்வயிற்
பய்நிரை சேர்ந்த பாணாட் டாங்க
ணெடுவிளிக் கோவலர் கூவற் றோண்டிய
கொடுவாய்ப் பத்தல் வார்ந்துகு சிறுகுழி
நீர்காய், வருத்தமொடு சேர்விடம் பெறாது
பெருங்களிறு மிதித்த வடியகத் திரும்புலி
யொதுங்குவன கழிந்த செதும்ப லீர்வழி
செயிர்தீர் நாவின் வயிரியர் பின்னறை
மண்ணார் முழவின் கண்ணகத் திசைத்த
விரலூன்று வடுவிற் றோன்று
மரல்வாடு மருங்கின் மலையிறந் தோரே.

என்பது : தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

தோழீ! என்றும் அறன்கடை படாஅ வாழ்க்கையும் பிறன்கடை செலாஅ செல்வமும் இரண்டும் பொருளின் ஆகும் புனை இழை என்று நம் இருள் ஏர் ஐம்பால் நீவியோர் நோய் நாம் உழக்குவம் ஆயினும் மரல் வாடு மருங்கின் மலை இறந்தோர் தாம் தம் செய்வினை முடிக்க - தோழீ!

'எக்காலத்தும் பாவத்திடத்துப் படாத வாழ்வும், பிறன் கடை வாயிலிற் சென்றிரவாத செல்வமுமாகிய இவ்விரண்டும் பொருளுடைமையால் ஆகும் புனைந்த இழையினையுடையாய்' என்று கூறி, தமது போக்கிற்கு நம்மை உடம்படுத்தற்பொருட்டு நமது இருண்ட அழகிய ஐம்பாலை நீவியோராகிய நம் தலைவர் தமது பிரிவால் நாம் நோய் உழக்குவமாயினும், மரல் வாடுகின்ற விடத்திலுள்ள மலையைக் கடந்து சென்றவராய், தாம் மேற்கொண்ட ஆள்வினையை முடிப்பாராக என்று, தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொன்னாள் என்க.

பயம் நிரை சேர்ந்த பாண் நாட்டு பல்வயின் ஆங்கண் நெடு விளி கோவலர் தோண்டிய கூவல் சிறு குழி கொடுவாய் பத்தல் வார்ந்து உகு நீர் காய் வருத்தமொடு சேர்வு இடம் பெறாது பெரு களிறு மிதித்த அடி அகத்து இரும் புலி ஒதுங்குவன கழிந்த செதுப்பல் ஈர் வழி செயிர் தீர் நாவின் வயிரியர் பின்றை அசைத்த மண் ஆர் முழவின் கண் அகத்து விரல் ஊன்று வடுவில் தோன்றும் மரல் வாடு மருங்கின் மலை - பாற் பசுவினம் சேர்ந்த பாணனது நாட்டின் பலவிடங்களிலும் நீண்ட சீழ்க்கை விளியையுடைய கோவலர் தோண்டிய கிணறாகிய சிறுகுழியிலே வளைந்த வாயையுடைய பத்தலினின்றும் வார்ந்து ஒழுகும் நீர் காய்ந்ததனாலுண்டான வருத்தத்தினோடு தனக்குற்ற நீர் வேட்கையைத் தீர்த்துக் கோடற்குச் சேரத்தக்க விடம்பெறாது பெரிய களிறு மிதித்த அடியினகத்திலே பெரிய புலி அடிவைத்து நடந்து சென்ற சேற்றோடு கூடிய ஈரிய வழியானது குற்றமற்ற நாவினையுடைய கூத்தரது பின்புறத்துக் கட்டப்பட்ட மார்ச்சனை பூசிய முழவின் கண்ணினிடையே விரலாலூன்றப்பட்ட வடுவைப் போலத் தோன்றுநிற்கும் மரல் வாடுகின்றவிடத்தினையுடைய மலை என்க.

அறத்தின் நீக்கப்பட்டமையின் 'அறன்கடை' என்பதற்குப் பாவம் என்று பொருள் கொண்டார் பரிமே. (குறள். 142.) அறன்கடை - அறத்தின் இறுதி என்பர் பரிப்பெருமாள்.

'அறன்கடைப்படாஅ வாழ்க்கையும்' என்றது முதல் 'புனையிழை' என்றது ஈறாக நின்றன தலைமகன் கூற்று; அதனைத் தலைமகள் கொண்டு கூறினாள். பாண் - பாணன்; 'மாணிழைக்கு வயலூரன், பாண் வரவு பாங்கி மொழிந்தன்று' என்புழிப் போல. பாணன், ஒரு வீரன்.

மரல் வாடுதல் - விலங்கு சுவைத்தலாலென்க; 'மரையா மரல்கவர' என்றாராதலின். செதுப்பு - சேறு; அல், சாரியை; 'செருத்தல் தீம்பால் செதும்புபடப் பிலிற்றி' என்றார் கதையினும். சின்னீர் என்றலுமாம்.